Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

FRIDAY, AUGUST 25, 2023

வெள்ளிக்கிழமை 25 ஒகஸ்ட், 2023 | ஒளி: 09 கதிர்: 070 | பக்கம்: 06 | நகரப்பதிப்பு | FREE




## 'சுப்ரீம் சட்'க்கு என்ன நடந்தது?

இந்தியாவின் நிலவுப் பயணத்துக்கான மூன்று முயற்சிகளுக்கும் 263 மில்லியன் டொலரே செலவாகியுள்ளதாக குறிப்பிட்ட எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, இலங்கையால் விண்ணுக்கு அனுப்பப்பட்ட 'சுப்ரீம் சட்' விண்கலத்துக்காக செலவு செய்யப்பட்டதாக கூறப்படும் 320 மில்லியன் டொலர் நிதிக்கும் என்ன நடந்தது என்று கேள்வியெழுப்பினார்.

தொடர்ச்சி P2



## நிலவை முத்தமிட்ட சந்திராயன் 3க்கு சபையில் வாழ்த்து

சந்திராயன்-3 திட்டத்தின் ஊடாக, சந்திரனில் காலடி வைத்துள்ள இந்தியாவுக்கு இலங்கை பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (25) வாழ்த்துகள் தெரிவிக்கப்பட்டது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, இவ்வாறாக இந்தியாவுக்கும் இந்திய அரசாங்கத்துக்கும் வாழ்த்துகளை தெரிவித்தார்.

தொடர்ச்சி P2





## இந்தியாவின் சாதனைக்கு ஜனாதிபதி ரணில் வாழ்த்து



சந்திராயன் - 3 விண்கலத்தை வெற்றிகரமாக சந்திரனின் தென் துருவத்தில் தரையிறக்கியதன் மூலம் இந்தியா அடைந்துள்ள தனித்துவமான சாதனைக்காக இந்திய பிரதமர் உள்ளிட்ட நாட்டு மக்களுக்கு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது அன்பான வாழ்த்துகளை தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## இந்தியாவுக்கு விமல் வாழ்த்து; இளைஞர்களுக்கு அறிவுரை



தேசப்பற்று தொடர்பில் இந்திய இளைஞர்களைப் பார்த்து, இங்குள்ள இளைஞர்கள் கற்றுக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்த தேசிய சுதந்திர முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச, சந்திரனுக்கு சென்ற நான்காவது நாடாகிய இந்தியாவுக்கு வாழ்த்துகளை தெரிவித்தார்.

தொடர்ச்சி P2




## 2011 கிண்ணத்தில் காட்டிக்கொடுப்பு

2011 ஆம் ஆண்டில் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி தோற்கவில்லை என்றும் காட்டிக் கொடுக்கப்பட்டது என்றும் தெரிவித்த முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, அப்போதிருந்த தேர்வுக் குழுவின் உயர் அதிகாரியொருவரின் 2013 ஆம் ஆண்டின் சொத்து விவரங்களை ஆராய்ந்தால் அதனை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும் என்று தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

### பல விடயங்களின் அடிப்படையில்

# கலவரம் ஏற்படலாம்



**புலனாய்வு அமைப்புகள் எச்சரிக்கை; சர்வகட்சி கூட்டத்தை கூட்டுமாறு சஜித் வலியுறுத்தல்**

நாட்டில் குருந்தூர் மலை உள்ளிட்ட பல்வேறு விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, இன மற்றும் மத கலவரங்கள் ஏற்படலாம் என்றும் மற்றும் ஐ.எஸ் அமைப்பின் அச்சுறுத்தல்கள் நாட்டுக்கு ஏற்பட்டுள்ளதாகவும் புலனாய்வு அமைப்புகள் வெளியிட்டுள்ள எச்சரிக்கைகள் தொடர்பில் உடனடியாக சர்வகட்சி கூட்டத்தை கூட்டுமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளார்.

தொடர்ச்சி P2

## எந்த எம்.பியின் வீட்டையும் சுற்றிவளைக்க முடியாது

**கஜேந்திரனின் வீட்டுக்கு பாதுகாப்பு கோரினார் டிலான்**



எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினரின் வீட்டையும் சுற்றிவளைக்க எவருக்கும் இடமளிக்க முடியாது என்றும் கஜேந்திரகுமார் எம்.பியின் வீட்டுக்கு தேவையான பாதுகாப்பை வழங்க உடனடியாக அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சுயாதீன எதிரணி எம்.பியான டிலான் பெரேரா சபையில் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (25) இலங்கை கிரிக்கெட் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதம் இடம்பெற்றது.

தொடர்ச்சி P2

## விஞ்சிய வட்டி வீதங்களை குறைப்பதற்கு தீர்மானம்




நாட்டிலுள்ள அனைத்து உரிமம் பெற்ற வங்கிகளுக்கும் அடகு வைக்கும் வசதிகள் மீதான வட்டி வீதங்களை ஆண்டுக்கு 18 சதவீதமாகவும், முன் கூட்டி ஏற்பாடு செய்யப்பட்ட தற்காலிக மேலதிக பற்றுகளுக்கு 23 சதவீதமாகவும், கடனட்டைகளுக்கு 28 சதவீதமாகவும் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட வட்டி வீதங்களை விதிப்பதற்கு இலங்கை மத்திய வங்கி தீர்மானித்துள்ளது.

மேலும், மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதத்தினையும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்தினையும் முறையே 11.00 சதவீதம் மற்றும் 12.00 சதவீதம் கொண்ட அவற்றின் தற்போதைய மட்டங்களில் பேணுவதற்கும் மத்திய வங்கி தீர்மானித்துள்ளது.

தொடர்ச்சி P2

### வவுனியா இரட்டைக்கொலை:

## சிறையில் இருந்தவாறு பெண்ணுடன் பேச்சு

க. அகரன்



வவுனியாவை உலுக்கிய இரட்டைக் கொலை பிரதான சந்தேநபரிடம் இருந்து வவுனியா சிறைச்சாலையில் அலைபேசி மீட்கப்பட்டுள்ளதுடன்,


தொடர்ச்சி P2

## கடன் மீள்செலுத்தும் தொகை பாதியாகும்



வருடாந்த கடன் மீள் செலுத்தும் தொகையை சுமார் 6 பில்லியன் அமெரிக்க டொலரில் இருந்து 3 பில்லியனாக குறைக்கும் கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தை முயற்சி இடம்பெறுவதாக இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## அடையாள வேலைநிறுத்தத்தால் நோயாளிகள் அசௌகரியம்

ஏழு கோரிக்கைகளை முன்வைத்து நாடளாவிய ரீதியில் வைத்தியசாலைகளில் துணை வைத்திய நிபுணர்கள் மேற்கொண்ட ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தம் காரணமாக வைத்தியசாலைகளின் சேவைகள் முடங்கின.

தொடர்ச்சி P2

## குடிநீர் வழங்க கூட்டுத்திட்டம்



நாட்டில் கடும் வறட்சி நிலவும் நிலையில், குடிநீர் தேவையை அத்தியாவசிய அவசர நிலையாகக் கருதி, தடையின்றி குடிநீரை வழங்குவதற்கான கூட்டு வேலைத்திட்டமொன்றை முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவ்வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்காக குழுவொன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## வயலுக்கு சென்ற இருவர் மீது துப்பாக்கிச் சூடு

**பாப்பாமோட்டையில் சம்பவம்; இருவரும் பலி**

எஸ். றொசேரியன் லம்பேட்

மன்னார், பாப்பாமோட்டை, முள்ளிக்கண்டல் பகுதியில் வியாழக்கிழமை (24) காலை மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் மீது, இனம் தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் குறித்த இருவரும் உயிரிழந்துள்ளனர்.

வயலுக்கு தண்ணீர் பாய்ச்சுவதற்காக மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இருவரையும் இலக்கு வைத்து, காலை 8.30 மணியளவில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர்கள் நொச்சிக்குளம், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சன்னார் கிராமத்தை சேர்ந்தவர்கள் என தெரியவந்துள்ளது.

மேலதிக விசாரணைகளை, அடம்பன் பொலிஸார் மேற்கொண்டு வருவதுடன், தடயவியல் பொலிஸாரும் சோதனைகளை முன்னெடுத்தனர்.





## வறட்சியற்ற இடங்களில் அதிகளவு விளைச்சல்

"தற்போது நிலவும் வறட்சியால் சுமார் 75 ஆயிரம் ஏக்கர் வயல் நிலம் நாசமாகியுள்ளது. ஆனால், வறட்சி இல்லாத ஏனைய மாகாணங்களில் விளைச்சல் மிகவும் அதிகமான உள்ளது. எனவே, வெளிநாடுகளில் இருந்து அரிசி கொண்டு வர வேண்டிய அவசியம் இல்லை" என்று விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## நிலவை...

சஜித் பிரேமதாஸ வாழ்த்துகளை தெரிவித்து கூறுகையில், “இந்தியாவின் சந்திராயன் - 3 விண்கலம் மூலம் கொண்டு செல்லப்பட்ட ‘விக்ரம் லேண்டர்’ சந்திரனில் தரையிறங்கியுள்ளது. இதன்படி சந்திரனின் தென்துருவத்தில் காலடி வைத்த முதலாவது நாடாக இந்தியா வரலாறு படைத்துள்ளது.

அங்கு ரோவர் ஊடாக ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளது. தெற்காசியாவில் உள்ள நாடு, இவ்வாறான பணியை வெற்றிகரமாக முன்னெடுத்ததற்காக இந்திய அரசாங்கத்துக்கும், இந்திய மக்களுக்கும் நாங்கள், எங்களின் வாழ்த்துகளை கூறிக்கொள்கின்றோம்” என்றார்.

## 2011...

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (25) நடைபெற்ற இலங்கை கிரிக்கெட் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றும் போதே, மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

2011 ஆம் ஆண்டின் உலகக் கிண்ண போட்டியில் நாங்கள் தோல்வியடையவில்லை. காட்டிக் கொடுக்கப்பட்டுள்ளோம் என்ற நிலைப்பாட்டிலேயே நான் இப்போதும் இருக்கின்றேன். இதற்கு தேவையான சாட்சிகள் உள்ளன.

அதன்படி நாங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. 2011 காலப்பகுதியில் தேர்வுக் குழுவில் இருந்த உயர் அதிகாரியின் 2013 சொத்து விவரங்களை எடுத்துப் பார்த்தால் அவை சிக்கும்.

இதேவேளை போட்டி காட்டி கொடுப்புகள் இப்போதும் நடக்கின்றன. கடந்த காலங்களில் காலியில் நடந்த சம்பவங்கள் அதனை காட்டுகின்றன. இதன்படி விளையாட்டுத்துறையில் பெரும் ஊழல் மோசடிகள் உள்ளன. அது தற்போதைய எல்.பி.எல் வரையில் வந்துள்ளன” என்றார்.

## எந்த...

அதன் போது, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் வீட்டை சுற்றிவளைக்கவுள்ளதாக குழுவொன்று அறிவித்துள்ளமை தொடர்பில் விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றும் போதே டிலான் பெரேரா இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

மேலும் தெரிவிக்கையில், “கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி, நாளை (இன்று) பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கு வர வேண்டும் என்ற போதும், அவரால் வர முடியாது என்று கூறியுள்ளார்.

அதற்கு காரணம் அவரின் கொழும்பிலுள்ள வீட்டை குழுவொன்று சுற்றி வளைக்கவுள்ளதாக தெரிவித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலருடன் சென்றே இவ்வாறு சுற்றிவளைக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது பாரதூரமான விடயமே.

கஜேந்திரகுமார் எம்.பியின் தாயார் மிகவும் நோய்வாய்ப்பட்டவராக இருக்கின்றார். இது தொடர்பில் பாதுகாப்பு தரப்புக்கு அறிவிக்க வேண்டும். ஒவ்வொருவருக்கும் வேண்டியவாறு எம்.பிக்களின் வீடுகளை சுற்றிவளைக்க இடமளிக்க முடியாது.

இதனால் தயவு செய்து அவருக்கும், அவரின் வீட்டுக்கும் தேவையான பாதுகாப்பை உடனடியாக அரசாங்கம் வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றேன்” என்றார்.

இதன்போது சபைக்கு தலைமை தாங்கிய உறுப்பினர் சமன் பிரிய ஹேரத், இந்த விடயம் தொடர்பில் சபாநாயகருக்கு அறிவிக்க நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார்.

## சிறையில்...

பெண் ஒருவருடன் தினமும் 90 நிமிடங்கள் உள்ளடங்கலாக 35 தடவைகள் உரையாடியுள்ளதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் கொலை விசாரணைப் பிரிவினரால் நீதிமன்றத்துக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 23 ஆம் திகதி அதிகாலை, தோணிக்கல் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் புகுந்த நபர்கள், அவ் வீட்டில் இருந்த ஒருவர் மீது வாள் வீசி தாக்கியதுடன், வீட்டுக்கு பெற்றோல் ஊற்றி தீ வைத்தனர். இச்சம்பவத்தில் இளம் குடும்பஸ்தர்களான கணவன், மனைவி ஆகிய இருவரும் மரணமடைந்திருந்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் பிரதான சந்தேக நபர் உட்பட 6 பேர் கைது செய்யப்பட்டு குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் கொலை விசாரணைப் பிரிவினரால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் பிரதான சந்தேக நபர்கள் உட்பட 5 பேர் வவுனியா சிறைச்சாலையிலும், ஒருவர் அநுராதபுரம் சிறைச்சாலையிலும் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், வவுனியா சிறைச்சாலையில் இருந்த பிரதான சந்தேக நபர் அலைபேசி பாவித்துள்ளமை குற்றப் புலனாய்வு திணைக்களத்தினருக்கு தெரியவந்துள்ளது.

இதையடுத்து, குற்றப் புலனாய்வு திணைக்களத்தினர் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டு வந்ததையடுத்து, வியாழக்கிழமை (24) அதிகாலை சிறைச்சாலையில் மேற்கொண்ட திடீர் சோதனையில் பிரதான சந்தேக நபரிடம் இருந்து அலைபேசி மீட்கப்பட்டுள்ளது.

குறித்த அலைபேசி ஊடாக 3292 வெளிச் செல்லும் அழைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அதில் 3 அழைப்புக்கள் குறித்த நபரின் மனைவிக்கும், பிறிதொரு பெண்ணுக்கு ஒன்றரை மணித்தியாலப்படி 35 தடவைகள் அழைப்பு எடுத்து கதைத்துள்ளமையும் தெரியவந்துள்ளது.

## இந்தியாவின்...

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு விசேட வாழ்த்துச் செய்தியொன்றை அனுப்பியுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்தியா பெற்றுள்ள இந்த மாபெரும் வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றி தொடர்பில் அண்டை சகோதர நாடாக இலங்கையும் பெருமிதம் கொள்வதாக மேலும் குறிப்பிட்டார்.

“சந்திராயன்- 3 விண்கலத்தை சந்திரனின் தென் துருவத்தில் முதன்முறையாக வெற்றிகரமாக தரையிறக்கி இந்தியாவின் தனித்துவமான சாதனைக்காக உங்களுக்கும், இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான (இஸ்ரோ) குழுவினருக்கும் இந்திய மக்களுக்கும், எனதும் அனைத்து இலங்கை மக்களினதும் மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அண்டை சகோதர நாடுகளான இந்தியாவும் இலங்கையும் தனித்துவமான நீண்ட கால நட்பைக் கொண்டுள்ளன. தெற்காசிய குடும்ப உறுப்பினர்கள் என்ற வகையில், இந்த வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த சாதனையை நாங்கள் பெருமையுடன் கொண்டாடுகிறோம்.

அனைத்து மனித குலத்திற்காகவும் செய்யப்படும் இந்த அர்ப்பணிப்பு, உங்களது உன்னத குணத்தை உலகிற்கு பிரதிபலிக்கும் சந்தர்ப்பமாக குறிப்பிடலாம். இது சந்தேகத்திற்கு இடமின்றி எதிர்கால சந்ததியினரை அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் தொடர்ச்சியான முன்னேற்றத்தை அடைய ஊக்குவிக்கும்.

சூரிய குடும்பத்தில் உள்ள ஏனைய கிரகங்களை ஆராய்வதற்கான உங்கள் எதிர்கால இலக்கை அடைவதற்கு உங்களுக்கும் அனைத்து விஞ்ஞானிகளுக்கும் நல்வாழ்த்துத் தெரிவிக்க இந்த வாய்ப்பைப் பயன்படுத்துகிறேன்” என்று அந்த வாழ்த்துச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கலவரம்...

மேற்குறிப்பிட்ட விடயங்கள் குறித்து அண்மைக் கலமாக வெளியாகும் செய்திகள் தொடர்பாக பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (24) விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

“கடந்த தினங்களில் சர்வதேச மற்றும் உள்நாட்டு ஊடகங்களில் பல்வேறு புலனாய்வு அமைப்புகள் தெரிவித்து செய்திகளை வெளியிட்டுள்ளன. இந்த நாட்டில் இனங்கள் மற்றும் மதங்களுக்கு இடையே பெரும் மோதல்கள் ஏற்பட்டு மேலும் கலவரமான நிலைமை மற்றும் மேலும் வெடிப்பு சம்பவங்கள் தொடர்பில் சர்வதேச ஊடகங்களிலும், உள்நாட்டு ஊடகங்களிலும் செய்திகள் வெளியாகின்றன.

இது மிகவும் அச்சமிக்க விடயமாகும். இது தேசிய பாதுகாப்புக்கு பாதிப்பான விடயமாகும்.

இந்நிலையில் தற்போதைய அரசாங்கத்திடம் விசேட கோரிக்கையொன்றை விடுகின்றோம். உடனடியாக அனைத்து கட்சிகளையும் அழைத்து இவ்வாறான விடயம் உண்மையா, பொய்யா என்று கூற வேண்டும்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலுடன் நாட்டின் பாதுகாப்பு பிரச்சினைகள் உருவாகியுள்ளன. இதனால் இந்த விடயம் தொடர்பில் இந்தச் சபையின் அவதானத்தை செலுத்தி அனைத்து அரசியல் தரப்பினரையும் தெளிவுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்” என்றார்.

## விஞ்சிய...

இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையானது புதன்கிழமை (24) நடைபெற்ற அதன் கூட்டத்தில் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாக மத்திய வங்கி வியாழக்கிழமை (25) தெரிவித்தது.

உள்நாட்டு மற்றும் உலகளாவிய பொருளாதாரத்தில் தற்போதைய மற்றும் எதிர்பார்க்கப்படுகின்ற அபிவிருத்திகளின் கவனமான பகுப்பாய்வு மற்றும் 2023 ஜூனிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்ட நாணய நிலைமைகளின் குறிப்பிடத்தக்க தளர்வடைதலையும் தொடர்ந்து சபை இத்தீர்மானத்தினை மேற்கொண்டது.

இதுவரையிலான காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நாணயக்கொள்கை தளர்வடைதல் வழிமுறைகளுக்குப் பதிலிறுத்தும் விதத்தில் சந்தை வட்டி வீதங்களின் கீழ்நோக்கிய சீராக்கத்தினையும் சந்தை வட்டி வீதங்களை மேலும் சீராக்குவதற்கு விரைவாக இடமளிப்பதற்கான தேவைப்பாட்டினையும் நாணயச்சபை கருத்தில் கொண்டது.

இருப்பினும், குறித்த சில கடன்வழங்கல் உற்பத்திகளின் சந்தை வட்டி வீதங்கள் தொடர்ந்தும் விஞ்சிய விதத்தில் காணப்படுவதையும் அவை தற்போதைய நாணயக்கொள்கை நிலைப்பாட்டுடன் இசைந்து செல்லும் விதத்திலமையவில்லை என்பதையும் சபை அவதானித்தது.

மேலும், அண்மைய நாணயக்கொள்கை தளர்வடைதல் வழிமுறைகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் ஒட்டுமொத்த சந்தைக் கடன்வழங்கல் வட்டி வீதங்களில் விரைவான வீழ்ச்சியினை சபை எதிர்பார்க்கின்றது.

இதற்கமைய, விஞ்சியளவில் காணப்படக்கூடிய குறித்த சில கடன்வழங்கல் வட்டி வீதங்களைக் குறைப்பதற்கும் எதிர்வருகின்ற காலப்பகுதியில் உரிமம்பெற்ற வங்கிகள் பொருத்தமான அளவால் ஒட்டுமொத்த ரூபாய்க் கடன்வழங்கல் வட்டி வீதங்களைக் குறைப்பதனை நெறிப்படுத்துவதற்கும் இலக்கிடப்பட்ட நிர்வாக வழிமுறைகளைப் பின்பற்றுவதற்குச் சபை தீர்மானித்தது என மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.

## கடன்...

புதன்கிழமை (24) கூடிய இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையின் தீர்மானங்களை அறிவிப்பதற்காக வியாழக்கிழமை (25) கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் குறிப்பிட்டார்.

வருடாந்த வெளிநாட்டு கடன் சேவை கட்டணத்தை சுமார் 3 பில்லியன் அமெரிக்க டொலராக அதாவது பாதியாக குறைக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் குறிப்பிட்டார்.

கொள்கை வட்டி விகிதங்கள் குறைக்கப்பட்டு, பணவியல் கொள்கை பணப்புழக்கம் அதிகரிக்கப்படுவதால், சந்தை வட்டி விகிதங்களும் குறையும் என்று தாங்கள் நம்புவதாக குறிப்பிட்ட அவர், ஆனால் நினைத்தது போல் குறைக்கவில்லை என்றால், ஏதாவது ஒழுங்குமுறை நடவடிக்கை எடுக்க வேண்டி வரும் என்றும் குறிப்பிட்டார்.

## சுப்ரீம்...

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (24) விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர், அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியா விண்வெளி பயணத்தில் சந்திராயன்- 1, சந்திராயன் - 2, சந்திராயன் -3 என்று மூன்று முயற்சிகளை மேற்கொண்டே சந்திரனில் காலடி வைத்துள்ளது. இந்த மூன்று திட்டங்களுக்கும் மொத்தமாக 263 மில்லியன் டொலரே செலவாகியுள்ளது.

ஆனால், எமது நாட்டில் 2012 ஆம் ஆண்டில் ‘சுப்ரீம்சட் -1’ திட்டத்திற்காக 320 மில்லியன் அமெரிக்க டொலர் செலவு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு செலவு செய்யப்பட்ட 320 மில்லியன் டொலருக்கும் என்ன நடந்தது என்பது தொடர்பில் பாராளுமன்றத்துக்கு அறிக்கையொன்றை முன்வைக்குமாறு நான் சபை முதல்வரிடம் கோரிக்கை விடுக்கின்றேன். இவ்வளவு செலவு செய்து சந்திரனுக்கு போகவில்லை. நாட்டை பாதாளத்திற்கே கொண்டு சென்றுள்ளனர்” என்றார்.

## இந்தியாவுக்கு...

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (24) இந்தியாவுக்கு வாழ்த்து தெரிவித்து உரையாற்றும் போதே விமல் வீரவன்ச மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“எமது அயல் நாடான இந்தியா சந்திரனுக்கு சென்ற நான்காவது நாடாகியமை தொடர்பில் அந்த நாட்டுக்கு நாங்கள் வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கின்றோம். அதேபோன்று இந்தியாவின் அதிஷ்டமாக இவ்வளவு செலவு செய்து சந்திரனுக்கு போகும் போது, மலசல கூடமின்றி இத்தனை பேர் இருக்கின்றனர்; வறுமையில் இத்தனை பேர் இருக்கின்றனர்; படிக்காதவர்கள் இத்தனை பேர் இருக்கின்றனர் என்றெல்லாம் கூறி, அந்த மகிழ்ச்சியை தடுக்கும் கீழ்த்தரமான கலாசாரம் இந்திய இளைஞர்களிடம் இல்லை.

அது தொடர்பில் பெருமைப்பட வேண்டும். அவர்கள் எந்த இனம், குலமாக இருந்தாலும் இந்தியக் கொடியுடன் இந்திய தேசம் என்ற புதுமையான உணர்வுடன் இருக்கின்றனர். அதனை விடுத்து அங்குள்ள குறைகளை கூறிக்கொண்டு அதனை தடுக்கும் எண்ணத்தில் அங்குள்ளவர்கள் இல்லை.

எமது இளைஞர்களையும் இந்தியாவிடம் இருந்து கற்றுக்கொள்ளுமாறு தெரிவித்துக்கொண்டு, சந்திரனுக்கு சென்ற நான்காவது நாடான இந்தியாவுக்கு எமது வாழ்த்துகளையும் கௌரவத்தையும் தெரிவித்துக்கொள்கின்றோம்” என்றார்.

## அடையாள...

வியாழக்கிழமை (24) காலை 8 மணி முதல் ஆரம்பிக்கப்பட்ட வேலைநிறுத்தம் காரணமாக மருந்துகளை பெற்றுக் கொள்வதற்காக வைத்தியசாலைகளுக்கு வந்த பல நோயாளர்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகினர்.

சி.டி மற்றும் எம்.ஆர்.ஐ ஸ்கேன், எஸ்ரே, இரத்த அறிக்கைகள் மற்றும் துணை வைத்திய நிபுணர்களின் ஆதரவு தேவைப்படும் ஏனைய சேவைகளை பெற முடியவில்லை என்று நோயாளிகள் விசனம் தெரிவித்தனர்.

வேலைநிறுத்தம் காரணமாக வைத்தியர்கள் இருந்த போதிலும் மருந்தாளர்கள் மற்றும் ஏனைய துணை மருந்துவ சேவைகள் கிடைக்கவில்லை.

ஐந்து தொழிற்சங்கங்களைச் சேர்ந்த கதிரியக்க தொழில்நுட்ப வல்லுநர்கள், ஆய்வக விஞ்ஞானி, மருந்தாளர்கள், பௌதிக சிகிச்சையாளர்கள், தொழில்சார் சிகிச்சையாளர்கள் போன்றோர் வேலை நிறுத்தத்தை முன்னெடுத்தனர்.

நிபுணர்களை உயர் தரத்துக்கு உயர்த்துவது தொடர்பான சுற்றறிக்கை தாமதம், துணை வைத்திய நிபுணர்களின் புதிய நியமனங்களை நிறுத்துதல், நியமன நடைமுறை திருத்தம் தாமதம் ஆகிய காரணங்களால் இந்த வேலைநிறுத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## குடிநீர்...

நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமானின் கோரிக்கைக்கமைய பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில், பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்ற கூட்டத்தின்போதே இது தொடர்பில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி நீர்வழங்கல், நீர்பாசனம், பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சுகள் இணைந்தே கூட்டு வேலைத்திட்டத்தை முன்னெடுக்கவுள்ளன.

பிரதமரின் செயலாளர் தலைமையில் மேற்படி மூன்று அமைச்சுகளின் செயலாளர்களை உள்ளடக்கிய வகையில் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ள நிலையில், துறைசார் அரச நிறுவனங்களும் இக்குழுவுடன் இணைந்து செயற்பட வேண்டும்.

நாட்டில் நிலவும் கடும் வறட்சியால் குடிநீரை பெறுவதில் உள்ள சிக்கல்கள், சுகாதாரமான நீரை வழங்குவதில் உள்ள நெருக்கடிகள் பற்றி ஆராயப்பட்டு அது தொடர்பில் கருத்துகளும் பெறப்பட்டன. காத்திரமான சில முடிவுகளும் எடுக்கப்பட்டுள்ளன.

# வறட்சியற்ற இடங்களில் அதிகளவு விளைச்சல்

தற்போது கையிருப்பில் உள்ள அரிசி, அடுத்த பெரும்போக அறுவடை வரை போதுமானதாக இருப்பதால், வெளிநாடுகளில் இருந்து அரிசியை இறக்குமதி செய்ய வேண்டிய அவசியமில்லை என்று குறிப்பிட்டார்.

விவசாயிகளுக்கு தேவையான மூன்று வகையான உரங்களையும் உரிய நேரத்தில் வழங்கியதாலும் நிதி உதவி அளித்ததன் காரணத்தாலும் கடந்த பெரும் போகம் வெற்றியடைந்ததாகவும், வறட்சி இல்லாத ஏனைய மாகாணங்களில் அதிக அறுவடை கிடைத்ததாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதியின் தொழிற்சங்க உறவுகள் பிரிவின் ஏற்பாட்டில் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற துறைசார் நிபுணர் கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அமைச்சர் மஹிந்த அமரவீர மேலும் கூறியதாவது, “பெரும்போக அறுவடை வெற்றிகரமாக இடம்பெற்றதாலும் மூன்று வகையான உரங்களும் உரிய நேரத்தில் வழங்கப்படுவதாலும், நிதி நிவாரணம் வழங்கப்படுவதாலும், எதிர்வரும் பெரும் போக அறுவடை வரை எங்களிடம் போதுமான அரிசி கையிருப்பு உள்ளது.

மேலும் தற்போது நிலவும் வறட்சியால் சுமார் 75 ஆயிரம் ஏக்கர் வயல் நிலம் நாசமாகியுள்ளது. ஆனால் வறட்சி இல்லாத ஏனைய மாகாணங்களில் விளைச்சல் மிகவும் அதிகமான உள்ளது. எனவே, வெளிநாடுகளில் இருந்து அரிசி கொண்டு வர வேண்டிய அவசியம் இல்லை.

தற்போது நெல் மற்றும் அரிசி விலைகள் அதிகரித்து வருகிறது. அதை கட்டுப்படுத்த வேண்டும். விவசாய அமைச்சர் என்ற ரீதியில் நெல் விலை உயர்வை நல்லதொரு நிலையாக கருதுகின்றேன். எனினும் நுகர்வோரை அசௌகரியத்திற்கு உள்ளாக்குவதை அனுமதிக்க முடியாது.

எனவே, நெல் மற்றும் அரிசியின் விலையைக் கட்டுப்படுத்த பொருத்தமான பொறிமுறையொன்று உருவாக்கப்பட வேண்டும். எங்களிடம் உள்ள குறைந்த அளவிலான நிலத்தில் அதிக அறுவடையைப் பெறுவதற்கு ஏற்ற வகையில் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும்.

விவசாயிகளை முறையாக அறிவூட்டாமை தொடர்பான குறைபாடு அடையாளம் காணப்பட்டுள்ளது. பல்வேறு அரசியல் நிலைப்பாடுகளைக் கொண்ட விவசாயத் தலைவர்கள் விவசாயிகளை சரியான அறிவூட்ட நடவடிக்கை எடுக்காமல் இருப்பதைக் காணமுடிகிறது.

எனினும் அரசியலின்றி விவசாயிகள் மத்தியில் சரியான தகவல் எடுத்துச் செல்லப்பட்ட ஹம்பாந்தோட்டை மாவட்டம் இந்த வருடம் சிறந்த விளைச்சலைப் பெற்றுள்ளது.

சரியான விதை நெல் தொடர்பான தகவல்களை விவசாயிகள் மத்தியில் கொண்டு செல்லத் தவறும் பட்சத்தில் அந்தச் செயற்பாடுகள் வெற்றியளிக்காது. அதேபோல் புதிய தொழில்நுட்ப பயன்பாடு மற்றும் அதன் பலன்கள் தொடர்பான விடயங்களை விவசாயிகள் மத்தியில் கொண்டு செல்ல வேண்டும். அவை சாத்தியமடையும் பட்சத்தில் எமது விளைச்சல் நிலங்களில் தன்னிறைவான விளைச்சலை பெற்றுக்கொள்ளும் வாய்ப்புக் கிட்டும்” என்றார்.

# மாணவர்களுக்கு சேமிப்பு புத்தகங்கள் கையளிப்பு

■ செ. கீதாஞ்சன்



முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த வறுமைப்பட்ட பாடசாலை மாணவர்களின் சேமிப்பை ஊக்குவிக்கும் நோக்கில், மாதாந்தம் 500 ரூபாய் வைப்பிலிடும் திட்டத்தை வி.பி பவுண்டேசன் அமைப்பு முன்னெடுத்து வருகின்றது. இதன் மூன்றாம் கட்டமாக, 85 மாணவர்களுக்கு வங்கி புத்தகங்கள் வழங்கும் நிகழ்வு புதன்கிழமை (23) விசுவமடு பொது நூலகத்தில் வி.பி பவுண்டேசன் அமைப்பின் இணைப்பாளர் கரிகாலன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக, தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவும் சிறப்பு விருந்தினர்களாக வி.பி பவுண்டேசன் நிறுவனத்தின் ஸ்தாபகர் தெ. இந்திரதாஸும் இலங்கை வங்கியின் வடமாகாண கணக்காய்வு உத்தியோகத்தர் வாசுகி உதயகுமாரும் இலங்கை வங்கியின் விசுவமடு கிளை முகாமையாளர் எஸ். கே நியூமனும் கலந்து சிறப்பித்தார்கள்.

யாழில் இருந்து விமான நிலையம் சென்ற

# சொகுசு பஸ் நீர்கொழும்பில் தீப்பற்றி எரிந்தது

■ எம்.இஸட் ஷாஜகான்



யாழ்ப்பாணத்திலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு பயணிகளை ஏற்றிச் சென்ற சொகுசு பஸ், நேற்று (24) அதிகாலை 4. 30 மணியளவில் நீர்கொழும்பில் தீப்பற்றி எரிந்தது.

நேற்று முன்தினம் (23) இரவு எட்டு மணி அளவில் யாழ்ப்பாணத்தில் இருந்து 35 பயணிகளை ஏற்றுக் கொண்டு புறப்பட்ட இந்தப் பஸ், நீர்கொழும்பு, தளுவகொட்டுவ பிரதேசத்தில் வைத்து திடீரென தீ பற்றி கொண்டது. உடனடியாக பஸ்ஸில் இருந்த பயணிகள் காப்பாற்றப்பட்டதுடன், வேறு வாகனங்களில் அவர்கள் விமான நிலையம் அனுப்பிவைக்கப்பட்டார்கள். நீர்கொழும்பு தீயணைப்புப் படையினர் சம்பவ இடத்துக்கு வந்து தீயை அணைத்தார்கள்.

இந்தச் சம்பவத்தில் பஸ் முற்றாக எரிந்துள்ளது. பயணிகள் எவருக்கும் காயம் ஏற்படவில்லை. கொச்சிக்கடை பொலிஸார் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# இணையவழி குற்றங்களைத் தடுக்க விழிப்புணர்வு ஊர்வலம்

■ ஷம்ஸ்.ஷம் நூர்தீன்




நாட்டில் அதிகரித்துவரும் இணையவழி குற்றங்கள், வன்முறைகளைத் தடுக்கும் நோக்கில் மட்டக்களப்பு மாவட்ட அருவி பெண்கள் வலையமைப்பின் ஏற்பாட்டில், அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் சிரேஷ்ட சட்டத்தரணி மயூரி ஜனன் தலைமையில் விழிப்புணர்வு ஊர்வலம் மட்டக்களப்பில் புதன்கிழமை (23) நடைபெற்றது.

கல்லடி பாலத்திலிருந்து ஆரம்பமாகி காந்தி பூங்காவில் நிறைவு பெற்ற இந்த ஊர்வலத்தில், அதிகளவான இளைஞர், யுவதிகள், பெண்கள் எனப் பலரும் கலந்து கொண்டதுடன், இணையவழிக் குற்றங்களைத் தடுக்கும் வாசகங்கள் கொண்ட பதாகைகள், சமிக்ஞைகள் காட்சிப்படுத்தப்பட்ட ஊர்திகள் என்பன இடம்பெற்றிருந்தன. அத்துடன், காந்திப்பூங்கா வளாகத்தில் இணையவழிக் குற்றங்களைத் தடுக்கும் விவரங்கள் அடங்கிய பதாகையும் நிறுவப்பட்டது.

‘சொர்க்கத்தின் சுமை: மலையகக் கதைகளின் காட்சி’

# யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கண்காட்சி

■ பு. கஜிந்தன்



யாழ்ப்பாண பல்கலைக்கழக நுண்கலைத்துறை மற்றும் கலை வட்டத்தின் ஏற்பாட்டில் ‘சொர்க்கத்தின் சுமை: மலையகக் கதைகளின் காட்சி’ எனும் கண்காட்சி, நுண்கலைத்துறை காட்சிக்கூடத்தில் புதன்கிழமை (23) ஆரம்பமானது. ஓகஸ்ட் 31ஆம் திகதி வரை காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை இக்கண்காட்சியை பார்வையிட முடியும்.

ஆரம்ப நிகழ்வில், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறீசற்குணராஜா, கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் சி. ரகுராம், நுண்கலைத்துறை தலைவர் பேராசிரியர் தா. சனாதனன், யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணை ஸ்தானிகர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் ஆகியோர் பங்கேற்றதுடன் விரிவுரையாளர்கள் மாணவர்கள் ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

மேலும் கர்நாடக இசைப் பாடகர் ரி.எம் கிருஷ்ணா, பிரபல தமிழக எழுத்தாளர் பெருமாள் முருகன், வரலாற்றாசிரியரும் ஆய்வாளருமான பேராசிரியர் ஆ.இரா. வேங்கடாசலபதி, ‘காலச்சுவடு’ வெளியீட்டக உரிமையாளர் கண்ணன் சுந்தரம் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

தென்னிந்தியாவில் இருந்து மலையகத்துக்கு தோட்டத் தொழிலாளர்கள் அழைத்து வரப்பட்டு 200 ஆண்டுகள் நிறைவை முன்னிட்டு, குறித்த கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மேர்வின், வீரசேகர, கம்மன்பில மூவரும்

# இன்னுமோர் இனக்கலவரத்துக்கு தூபமிடுகின்றனர்

■ பு. கஜிந்தன்

ஆட்டை கடித்து, மாட்டை கடித்து, தமிழ் மக்களை கடித்து, தமிழ் மக்களுடைய அரசியல் பிரதிநிதிகளை கடித்து, இறுதியாக நீதிபதிகளையும் கடித்து குதறத் தொடங்கியுள்ளது சிங்கள பௌத்த பேரினவாதம் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடக பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு மேலும் தெரிவிக்கையில், இந்த வாரத்தை மாத்திரம் எடுத்து கொண்டால், மேர்வின் சில்வா, “தமிழர்களின் தலைகளை கொய்வேன்” என்று கூறுகின்றார். சரத் வீரசேகர, “முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியை மனநோயாளி” என்று கூறுகின்றார். உதய கம்மன்பில, “கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கொழும்பில் உள்ள வீட்டுக்கு முன்பாக போராட்டம் செய்வேன்” என்கின்றார்.

இவர்களுடைய கருத்துகளை தொகுத்து நோக்கும்பொழுது, இவர்கள் அனைவரும் சேர்ந்து, மீண்டும் ஓர் இனக்கலவரத்துக்குத் திட்டமிட்டு இருக்கிறார்களா என்ற நியாயமான சந்தேகம் எழுகின்றது.



தமிழ் தேசிய மக்கள் முன்னணியும், தமிழ் அமைப்புகளும், சிவில் அமைப்புகளும் தொடர்ந்து வலியுறுத்தி வருவதை போல, இலங்கையிலே நடைபெற்ற இனவழிப்பிற்கு தமிழ் மக்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட இனப்படுகொலைக்கு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் உள்ளக பொறிமுறை ஊடாக ஓர் உலக விசாரணையின் ஊடாக நீதி கிடைக்கப் பெற மாட்டாது என்ற விடயத்தை சரத் வீரசேகரவின் கருத்துகள் மீளவும் உறுதிப்படுத்தி இருக்கின்றன.

ஏனென்றால், சிங்கள பௌத்த பேரினவாதமும் ஆட்சியாளர்களும், தாங்கள் விரும்புகின்ற தீர்வுகளையும் கருத்துகளையும் தான் இலங்கையில் இருக்கின்ற நீதிமன்றங்கள் கொடுக்க வேண்டும் என்று விரும்புகின்றார்கள்; ஆணையிடுகின்றார்கள் என்றார்.

திருகோணமலை தலைமையக

# பொலிஸ் நிலையத்தில் சந்தேகநபர் மரணம்

## தற்கொலை என பொலிஸார் தெரிவிப்பு

■ ஏ.எம் கீத்

திருகோணமலை, ஜமாலியா, தக்வாநகரில் செவ்வாய்க்கிழமை (22) திருட்டு குற்றச்சாட்டில் திருகோணமலை தலைமையக பொலிஸாரால் அழைத்து செல்லப்பட்ட முஹமட் சுகைட் (வயது 27), தடுப்புக்காவலில் தற்கொலை செய்ததாக, இறந்த நபரின் பெற்றோருக்கு பொலிஸாரால் புதன்கிழமை (23) மத்தியானம் அறிவிக்கப்பட்டது. இதையடுத்து, புதன்கிழமை மாலை ஒன்பது மணி தொடக்கம் இரவு 11 மணிவரை ஜமாலியா பிரதேசவாசிகளால் திருகோணமலை - நிலாவெளி வீதியில் டயர் எரிக்கப்படடு, வீதி மூடப்பட்டது. இதையடுத்து முறுகல் நிலை உருவானது. ஸ்தலத்துக்கு விஜயம் செய்த பொலிஸார், உரிய விசாரணைகள் மூலம் நீதி வழங்கப்படும் என்ற உறுதிமொழியை அடுத்து பிரதேசவாசிகள் கலைந்து சென்றனர். மேலதிக விசாரணையை திருகோணமலை பொலிஸார் மேற்கொள்கின்றனர்.

மன்னாரில் கடும் வறட்சி:

# மடுவில் மாத்திரம் 3,244 நபர்கள் பாதிப்பு

■ எஸ். றொசேரியன் லெம்பேட்

மன்னார் மாவட்டத்தில் கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக வறட்சியான வானிலை நிலவி வருகின்றமையால் பொதுமக்கள் உட்பட கால்நடைகள் பாதிக்கப்பட்டு வருகின்றன.

மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் தகவலின் பிரகாரம், மடு பிரதேச செயலக பிரிவில் உள்ள மல்லவராஜன், கட்டையடம்பன், மாதா கிராமம், பெரிய முறிப்பு, இரணை இலுப்பகுளம், கீரிசுட்டான் போன்ற கிராமங்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக தகவல் வழங்கியுள்ளனர்.

குறித்த கிராமங்களில் வாழும் 952 குடும்பங்களை சேர்ந்த 3,244 பேர் நேரடியாக பாதிக்கப்பட்டு உள்ளதாகவும் வறட்சியான வானிலை தொடரும் பட்சத்தில் பாதிக்கப்படும் குடும்பங்களின் எண்ணிக்கை பல மடங்கு அதிகரிக்கலாம் எனவும் மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு எச்சரித்துள்ளது.

# ஞாயிறன்று நூல் வெளியீடு



அரச சாஹித்ய பரிசுபெற்ற சிறுகதை எழுத்தாளர் உக்குவளை அக்றம் எழுதிய ‘உக்குவளை ஒரு வரலாற்றுத் தடம்’ எனும் ஆய்வு நூல் வெளியீடு, உக்குவளை அஜ்மீர் தேசிய பாடசாலை மண்டபத்தில் எதிர்வரும் 27 ஞாயிற்றுக்கிழமையன்று காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

மாத்தளை கலை இலக்கிய பேரவை செயலாளர் எம்.எம். பீர்முஹமது தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், உதவி கல்வி பணிப்பாளர்களான ஜே.எம் இக்பால், எஸ்.எம்.ராசிக், உக்குவளை அஜ்மீர், தேசிய பாடசாலை அதிபர் எம். இக்பால், யுனிசெப்பின் முன்னாள் திட்டமிடல் அதிகாரி ஜே.ஏ வாஹித் ஆகியோர் உட்பட எழுத்தாளர்கள் கலைஞர்கள் நலன்விரும்பிகள் பலரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வை உக்குவளை அஜ்மீர் தேசிய பாடசாலை சர்வதேச பழைய மாணவர்கள் சங்கம் ஏற்பாடு செய்துள்ளது.

# காரைக்கால் மீனவர்கள் தாக்கப்பட்டமையை கண்டிக்கும் வடக்கு மீனவர்கள்

■ பு. கஜிந்தன்

காங்கேசன்துறை கடற்பரப்பில் இடம்பெற்ற, காரைக்கால் மீனவர்கள் மீதான தாக்குதலை கண்டிப்பதாக, யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனத்தின் முன்னாள் உப தலைவர் நா. வர்ணகுலசிங்கம் தெரிவித்துள்ளார்.

வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று முன்தினம் (23) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், காரைக்கால் மீனவர்கள் மீதான தாக்குதல் இடம்பெற்றதாக ஊடகங்கள் வாயிலாக அறிந்தோம். இவ்வாறு யார் தாக்குதல் நடத்தினாலும் அது தவறு. இதனை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம்.



தாக்குதல் நடத்தப்பட்டதாக சொல்லப்படும் படகு இலக்கம் வடக்கு - கிழக்கு மீனவர்களுடையவை இல்லை. ஏனென்றால் யாழ்ப்பாணம் என்றால் j எனவும், கிளிநொச்சி k எனவும் முல்லைத்தீவு m எனவும், மன்னார் mn எனவும் அடையாளப்படுத்தப்பட்டு இருக்கும் என்றும் தி.மு.க வினரே அதிகளவான விசைப்படகுகளை வைத்து எல்லைமீறிய மீன்பிடித்தலில் ஈடுட்டு, இலங்கை கடற்பரப்பில் மீன்வளங்களை அழித்து வருவதாகவும் குற்றம் சாட்டிய வர்ணகுலசிங்கம் முதலில் அவர்களை கட்டுப்படுத்துமாறும் கேட்டுக்கொண்டார்.

அமெரிக்கா போன்ற நாடுகள்

# இலங்கையின் நிலையை ஐ.நா கொண்டு செல்ல வேண்டும்

■ பு. கஜிந்தன்

அமெரிக்கா போன்ற நாடுகள் இலங்கையின் தற்போதைய நிலையை ஐ.நாவுக்கு கொண்டு செல்ல வேண்டும் என வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே சிவஞானம் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான அமெரிக்க தூதர் ஜூலி சுங் நேற்று முன்தினம் (23) யாழ்ப்பாணத்துக்கான விஜயம் மேற்கொண்ட போது, தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் சிலரை சந்தித்து கலந்துரையாடினார். குறித்த சந்திப்பு தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே சி.வி. கே சிவஞானம் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இரண்டு விடயங்கள் பேசப்பட்டன; பாராளுமன்றத்துக்கு இந்த விடயங்களை பாரப்படுத்த வேண்டிய தேவையில்லை. அரசியலமைப்பில் இருக்கின்ற விடயங்களை




ஜனாதிபதி அமல்படுத்த முடியும். ஆனால், அவரே 13ஆம் திருத்தத்தை அமல்படுத்துவேன் என்று சொல்லுகிறார். எதிர்ப்பவர்களிடம் மாகாண சபை முறைமையை இல்லாத செய்யச் சொல்லுகின்றார். இதைப் பார்க்கும்போது, அவரே மறைமுகமாக சொல்லி இருக்கின்றார் என தெரிகிறது. மற்றைய விடயம் வரிவிதிப்பு சம்பந்தப்பட்டதாகும் என்றார்.


## பொது அறிவிப்பு

### TAL லங்கா ஹோட்டல்ஸ் பிஎல்சி (PQ183)
### 43வது ஆண்டு பொதுக்கூட்டம்

TAL லங்கா ஹோட்டல்ஸ் பிஎல்சி (நிறுவனம்) தமது 43வது ஆண்டு பொதுக் கூட்டத்தை 2023 செப்டம்பர் மாதம் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலை 10.30 மணிக்கு இணையத்தளத்தின் மெய்நிகர் தளம் மூலம் கூட்டம் 2023 ஆகஸ்ட் மாதம் 25 அன்று நடைபெறும் என்றும், கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கும் அறிவிப்பின்படி அன்றைய நிகழ்ச்சி நிரலின் படி கையாளப்படும் என்றும் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது. கூட்டத்தை கூட்டுவது குறித்த விரிவான அறிவிப்பு மற்றும் நிகழ்ச்சி நிரல்களின் ப்ராக்ஸி அனுமதி பத்திரம் மற்றும் பதிவு செய்வது பற்றிய தேவையான தகவல்களுக்கு கொழும்பு பங்குச் சந்தை இணையத்தளத்திற்கு (https://www.cse.lk/pages/company-profile/company-profile.component.html?symbol=TAJ.N.0000 மற்றும் நிறுவனத்தின் இணையதளத்தினை அணுகவும்.

கூட்டத்தில் பங்கேற்க விரும்பும் பங்குதாரர்கள் மேலே குறிப்பிட்டுள்ள இணையதளங்களில் இருந்து பெறப்பட்ட பதிவுப் படிவங்களை பூர்த்தி செய்து தேவைக்கேற்ப பூர்த்தி செய்து நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட முகவரி அல்லது மின்னஞ்சலுக்கு deepa.perera@tajhotels.com அல்லது corporateservices@corporateservices.lk அனுப்ப வேண்டும். கூட்டம் நடைபெறும் நேரத்திற்கு 48 மணிநேரத்திற்கு முன்னதாக அனுப்பப்பட வேண்டும்

**TAL லங்கா ஹோட்டல்ஸ் பிஎல்சி இன் பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி**
**கோர்ப்பரேட் சேர்வீசஸ் (பிறைவேட்) லிமிடட்**
**செயலாளர்கள்**
**2023 ஓகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி**

# ‘சாமி வரம் கொடுத்தாலும் பூசாரி இடம் தரவில்லை’

நாட்டின் அந்நியச் செலாவணி இருப்பு நெருக்கடிக்கு முகங்கொடுத்த நிலையில், 2020 ஆம் ஆண்டின் முற்பகுதியிலிருந்து இறக்குமதிகளுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன. இந்நிலையில், சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்திக் கொண்ட கடன் வசதி உடன்படிக்கையின் பிரகாரம், இவ்வாண்டின் முற்பகுதி முதல் இறக்குமதிக் கட்டுப்பாடுகளில் படிப்படியாக தளர்வுகள் ஏற்படுத்தப்பட்ட வண்ணமுள்ளன.

பெருமளவான இறக்குமதிக் கட்டுப்பாடுகள் தற்போது தளர்த்தப்பட்டுள்ள நிலையில், வாகன இறக்குமதிகளுக்கான கட்டுப்பாடுகள் தொடர்ந்தும் அமலிலுள்ளன. இந்நிலையில், கடந்த வாரம் முதல் பொதுப் போக்குவரத்துக்கு பயன்படுத்தப்படும் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான அனுமதி வழங்கப்பட்டு, வர்த்தமானி அறிவித்தலும் நிதி அமைச்சால் வெளியிடப்பட்டிருந்தது.

வாகன இறக்குமதி மற்றும் விற்பனையில் ஈடுபட்ட உள்நாட்டு வியாபாரங்கள் பெருமளவு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்திருந்த நிலையில், இந்த அறிவிப்பு அவர்களுக்கு ஓரளவு நிவாரணத்தை வழங்குவதாக இருந்த போதிலும், மீண்டும் இறக்குமதி செயற்பாடுகளில் ஈடுபட அவர்கள் முனைந்த போது மற்றுமொரு சவாலுக்கு அவர்கள் முகங்கொடுக்க நேரிட்டது.

அதாவது, இலங்கை சர்வதேச நாடுகள் மற்றும் கடன் வழங்குநர்களிடமிருந்து பெற்றுக் கொண்ட கடன்களை மீளச் செலுத்துவதை கடந்த ஆண்டின் ஏப்ரல் மாதம் முதல் இடைநிறுத்தியுள்ளதால், நாடு திவாலாகிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. நாட்டின் அந்நியச் செலாவணி இருப்பு தற்போது 3 பில்லியன் அமெரிக்க டொலர் எனும் பெறுமதிக்கு உயர்ந்திருந்த போதிலும், திவாலாகிய நிலையிலிருந்து இன்னமும் மீளவில்லை.

பங்களாதேஷிடமிருந்து 2020 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் பெற்றுக் கொண்ட 200 மில்லியன் அமெரிக்க டொலர் கடனை மீளச் செலுத்துவதை தொடர்ந்தும் காலம் தாழ்த்தி வந்திருந்த நிலையில் இம்மாதம் அதன் ஒரு பகுதியை மீளச் செலுத்தும் வகையில் முதற்கட்டமாக 50 மில்லியன் அமெரிக்க டொலரை மீளச் செலுத்தியிருந்ததுடன், ஒகஸ்ட் 31ஆம் திகதி மற்றுமொரு 50 மில்லியன் அமெரிக்க டொலரை மீளச் செலுத்தவுள்ளதாக அறிவித்துள்ளது.

இவ்வாறிருக்கையில், நாட்டின் சர்வதேச கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகளினூடாக இன்னமும் இறுதித் தீர்மானம் எய்தப்படாத நிலையில், இலங்கை கடந்த காலங்களில் பெற்றுக் கொண்ட கடன்களை மீளச் செலுத்துவதை இன்னமும் ஆரம்பிக்கவில்லை. இந்நிலையில், இலங்கையின் வியாபாரங்கள் சர்வதேச நாடுகளிலிருந்து இறக்குமதியை மேற்கொள்வதற்கு அவசியமான கடன் உத்தரவாத பத்திரங்களை சமர்ப்பிப்பதில் சிக்கல்களுக்கு முகங்கொடுத்துள்ளன. நாட்டின் திவாலாகிய நிலை, இந்த உத்தரவாதப் பத்திரங்களின் கொடுப்பனவை மேற்கொள்ளும் உறுதி மொழியின் நம்பிக்கையை கேள்விக்குட்படுத்தியுள்ளது.

இதன் காரணமாக ஒரு பிரிவுக்குரிய வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் (சாமி) அனுமதி (வரம்) கொடுத்த போதிலும், அவற்றுக்கான கொடுப்பனவுகளை ஏற்றுக் கொள்வதற்கு வெளிநாட்டு (பூசாரி) நிறுவனங்கள் மறுப்புத் தெரிவித்துள்ளன.

அரசாங்கமும், இலங்கை மத்திய வங்கியும் தலையிட்டு இந்தச் சிக்கல் நிலைக்கு தற்காலிக தீர்வை காண முடியுமானாலும், நாட்டின் கடன் மீளச் செலுத்தல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு, சர்வதேச தரப்படுத்தல்களில் நாட்டின் தரப்படுத்தல் உயர்வடையும் நிலைக்கு நகர்ந்தால் மாத்திரமே இந்தச் சிக்கல் நிலைக்கு நிரந்தரத் தீர்வு கிடைக்கும்.


## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


கறுப்பு ஜூலையின் நாற்பதாண்டுகளின் பின்னர் – 15:

# சட்டசபை வழி இனவாதம்



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

முதலாவது சட்டசபையை சர்வசன வாக்குரிமை உருவாக்கியிருந்த போதும், சிறுபான்மையினரை ஓரங்கட்டும் நடவடிக்கைகளை சிங்கள அரசியல்வாதிகள் மெதுமெதுவாக அரங்கேற்றத் தொடங்கினர்.

மலையகத் தமிழர்கள் அதிகளவில் வாக்களிக்கப் பதிவு செய்தனர். இது சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கும் என்று சிங்கள அரசியல்வாதிகள் அஞ்சினர். அவர்கள் வாக்காளர்களாகப் பதிவதில் மேலதிகமாக கட்டுப்பாடுகளைக் கோரினர். இதன்மூலம் மலையகத் தமிழ் வாக்காளர்களின் எண்ணிக்கையை குறைக்க முயன்றனர்.

இதில் பிரதான பங்காற்றியவர் ‘தேசபிதா’ என்றழைக்கப்படுகின்ற டி.எஸ். சேனாநாயக்கா. அவர் தொடர்ச்சியாக கொலனி ஆட்சியாளர்களுக்கு இது தொடர்பில் தனது மனுக்களை அனுப்பியபடியே இருந்தார். குறிப்பாக, தேர்தல் சட்டங்கள் மீதான தனது சொந்த வியாக்கியானங்களை முன்வைத்து, சிறுபான்மையினர் வாக்காளர்களாகப் பதிவதைத் தடுக்கும் காரியத்தில் இறங்கினார். குறிப்பாக, மலையகத் தமிழரைக் குறிவைத்தார்.

வாக்காளராகப் பதியப்படக் கூடிய அனைவரும், இலங்கையை வசிப்பிடமாகக் கொண்டிருக்க வேண்டும் என்று சிங்களத் தலைவர்கள் வாதிட்டனர். ஏறக்குறைய அனைத்து மலையகத் தமிழர்களும், இலங்கையையே வசிப்பிடமாகக் கொண்டுள்ளனர் என்பது தெளிவாகத் தெரிந்ததும், சிங்கள அரசியல்வாதிகள் வாக்களிக்கத் தகுதியுள்ளவர்கள் இலங்கையில் பிறந்தவராக இருக்க வேண்டும் என்பதோடு இலங்கையில் வசிப்பதற்கான ‘நிலையான ஆர்வத்தை’ நிரூபிக்க வேண்டும் என்றும் கோரினர். குறித்த விடயங்கள் சட்டசபையில் விவாதிக்கப்பட்டன. பின்னர் அவை சட்டசபையில் சட்டமூலமாகவும் கொண்டுவரப்பட்டன.

இங்கே கவனிக்க வேண்டியது யாதெனில், கொலனித்துவ நிர்வாகிகள் செய்யாத பல சீர்திருத்தங்களை சட்டசபை செயற்படுத்தியது. இதில் முக்கியமானது, வருமான வரியை அறிமுகப்படுத்தியமையாகும். இந்த வரி, பொது சேவைகளில் முதலீடு செய்ய அவர்களுக்கு வருவாயை வழங்கியது. இது அரசசேவையில் பெரும்பான்மையோராக இலங்கையர்கள் மாறுவதற்கு வழியமைத்தது.

மார்ச் 1932 இல், பிரித்தானிய அரச ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதை இடைநிறுத்துமாறு ஆளுநருக்கு பொதுச் சேவை ஆணைக்குழு ஆலோசனை வழங்கியது. மத்திய மற்றும் மேல் மாகாணங்களின் முக்கிய பதவிகள், 1941 இல் இலங்கையர்களுக்கு திறக்கப்பட்டன. இப்பதவிகளுக்கான போட்டி, இனத்துவத்தை முன்னணிக்குக் கொண்டுவந்தது. இப்பதவிகளுக்கு போட்டியிட்டவர்கள் அதிகாரவர்க்கத்தைச் சேர்ந்த மேட்டுக்குடிகளாக இருந்தபோதும் அதிகாரபோதை இவர்களிடையே முரண்பாடுகளை தோற்றுவித்தது. இது இனவாதமாகவும் சிறுபான்மையினர் மீதான வெறுப்பாகவும் வெளிப்படத் தொடங்கியது.

சிங்கள தேசியவாத அரசியல்வாதிகள், ஒரு காலத்தில் வளமானதாக இருந்த உலர் வலயத்தை மீட்டெடுக்கும் நோக்கத்துடன் நீர்ப்பாசனப் பணிகளை முன்னெடுத்தனர். அப்பகுதிகளில் விவசாயிகளைக் குடியேற்றுவதன் மூலமும் உலர்வலயத்தை புத்துயிர் பெறச்செய்யலாம் என்ற கருத்தைக் கொண்டிருந்தனர். அவர்கள் 1927 முதல் 1929 வரை செயற்பட்ட ஒரு காணி ஆணைக்குழுவின் பரிந்துரைகளைப் பின்பற்றினர்.

அரச காணிகளை விற்பனை செய்வதைக் கட்டுப்படுத்த ஒரு நில ஆணையரை நியமிக்கவும், ஊக வணிகர்களுக்கு விற்காமல் ‘கிராம விரிவாக்கத்திற்கு’ நிலத்தை ஒதுக்கீடு செய்யவும், காணி ஆணைக்குழு பரிந்துரைத்திருந்தது. நிலமற்ற கிராம மக்களை சுதந்திரமான விவசாயிகளாக மாற்ற உலர் வலயத்தில் அவர்களை குடியேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

சேனநாயக்க உலர் வலயத்தில் குடியேற்றத் திட்டங்களை உருவாக்குவதற்கு அழுத்தம் கொடுத்தார். இது சிங்கள அரசியல்வாதிகளுக்கு பல நன்மைகளைக் கொடுத்தது. முதலாவது, ஆங்கிலேயர்களுக்குப் பின்பான தகுதியான வாரிசுகள் தாங்களே என்ற அவர்களின் பிரசாரத்தை வலுப்படுத்தியது. இது பண்டைய நாகரிகத்தை மகிமைப்படுத்தும் வளர்ந்து வரும் சிங்கள தேசியவாதத்துடன் அவர்களை இணைத்தது. குறிப்பாக இது காணியின்மையால் அதிகம் பாதிக்கப்பட்ட மக்கள் என அடையாளம் காணப்பட்ட கண்டிய சிங்கள மக்களைக் கவரும் வழிமுறையாக இருந்தது.

1931 ஆம் ஆண்டின் காணிக் குடியேற்ற சட்டமூலமானது, முப்பது ஆண்டுகளுக்கு மேலாக ஒரு காணியில் ஒரு விவசாயி பயிரிட்டிருந்தாலோ வாழ்ந்துவந்தாலோ அக்காணி அவருக்கே சொந்தமாகும் என்ற நடைமுறையை அறிமுகப்படுத்தியது. இது ஓரளவு பலன் தந்தபோதும் உலர்வலயத்தில் பயிர்ச்செய்கைக்காக நீர்ப்பாசனம், ஊக்கத்தொகை மற்றும் உட்கட்டமைப்பு ஆகியவற்றுக்குப் பெருந்தொகையான நிதி செலவானது. அதில் பெரும்பகுதி அரிதான அந்நிய செலாவணியாகவே இருந்தது. இது ஒப்பீட்டளவில் சிலருக்கு பயனளித்தது. இது மீண்டும் நிலமற்றவர்களை அடிமைகளாகவும், நிலச்செல்வந்தர்கள் இன்னும் செல்வந்தர்களாக உருவெடுக்கவும் வழிசெய்தது.

உலகப் பொருளாதார மந்தநிலையால் உருவாக்கப்பட்ட நெருக்கடியை, சட்டசபையால் கையாள இயலவில்லை. 1920 களில் ஏற்றுமதிகள் வேகமாக அதிகரித்ததால் பொருளாதாரத்திற்கு ஏற்றம் நிறைந்த காலமாக இருந்தது. எவ்வாறாயினும், முக்கிய ஏற்றுமதி பயிர்களின் விலைகள் மந்தநிலையின் போது வீழ்ச்சியடைந்தன, மேலும் திட்டமிடாத விரைவான விரிவாக்கம் மற்றும் அளவுக்கதிகமான எதிர்பார்ப்புகளால் பொருளாதாரம் மோசமாகியது. தோட்டங்கள், வணிகத் துறை மற்றும் அரசாங்கம் என அனைத்தும் வேலைவாய்ப்புகளைக் குறைத்ததால் தொழிலாளர்கள், குறிப்பாக தோட்டத் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டனர். இலங்கை அன்றும் பொருளாதார நெருக்கடியை மிகவும் மோசமாகவே கையாண்டது என்பதுதான் வரலாறு.

1920களில் இந்தியா வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்தும் என்ற அச்சத்தில் தோட்டங்கள் தங்களுக்குத் தேவையானதை விட அதிகமான புதிய தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தின. நவம்பர் 1932க்குப் பிறகு உத்தரவாத வேலைகள் உள்ள தொழிலாளர்கள் அல்லது தோட்டங்களில் உள்ள உறவினர்கள் மட்டுமே இலங்கைக்குத் திரும்ப அனுமதிக்கப்பட்டனர். 1934 ஆம் ஆண்டில், பொருளாதார நிலைமைகள் கூடுதல் குடியேற்றத்தை நியாயப்படுத்துகின்றன என்று தோட்ட முதலாளிகள் அரசாங்கத்தை நம்பவைத்தனர். இது நாடளாவிய வேலையின்மையை அதிகப்படுத்தியது.

1920 களில் கொழும்பில் நகர்ப்புற தொழிலாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்தது, குறிப்பாக துறைமுகம் மற்றும் ரயில் திருத்துமிடங்களில அதிகளவானோர் வேலைக்கு வந்தனர். இவ்வாறு வேலையிழப்பால் புதிய வேலைதேடி நகரங்களுக்கு வந்தோரில் பெரும்பான்மையானவர்கள் சிங்கள பௌத்தர்கள்; மற்றவர்கள் தோட்டங்களை விட்டு வெளியேறிய தமிழர்கள். ஒருபுறம் சிங்களவர்களுக்குப் போட்டியாக மலையகத் தமிழர்கள் உருவெடுத்தார்கள்.

சிறுபான்மையினர் ஒருபுறம், வங்கி மற்றும் வட்டிக்குப் பணங்கொடுத்தல் ஆகியவற்றில் ஆதிக்கம் செலுத்துவதோடு தங்கள் வேலைகளைப் பறித்துக்கொண்டிருக்கிறார்கள் என்ற சிங்கள மக்கள் மத்தியில் உருவெடுத்த உணர்வை, சிங்கள அரசியல்வாதிகள் பயன்படுத்திக் கொண்டதால், பொருளாதார நெருக்கடி இன உறவுகளை மோசமாக்கியது.


நில உடைமை, நெற்பயிர்ச் செய்கை, சில்லறை வணிகம், மாணிக்கக்கல் அகழ்வு போன்ற சிங்களவர்கள் தங்களை உரிமையுடையவர்களாகக் கருதும் தொழில்களைப் பாதுகாப்பதற்காகச் சட்டம் இயற்றப்பட்டது. அதுவரை காலமும் கொலனித்துவ சட்டத்தின் கீழ், அனைத்து மக்களும் பிரித்தானியக் குடிமக்கள். ஆனால் சிங்கள தேசியவாதிகள் சிறுபான்மையினரை வெளிநாட்டினர் என்று கருதினர்.

முதல் சட்டசபை, வங்கி தொடர்பான ஓர் ஆணைக்குழவை நியமித்தது. பிரித்தானிய வங்கிகள் நேரடியாக இலங்கையர்களுக்கு கடன் வழங்கவில்லை. அதற்கு பதிலாக, அவர்கள் இந்தியாவைச் சேர்ந்த செட்டியார் வங்கியாளர்களிடம் கடன் கொடுத்தனர். அவர்கள் அதிக வட்டிக்கு பணத்தை இலங்கையர்களுக்கு திருப்பிக் கொடுத்தனர். இத்தொழிலில் திறமையுள்ளவர்களாக சிறுபான்மையினர் விளங்கினர்.

சட்டபை 1934 இல் ஓர் அரச அடமான வங்கியை உருவாக்கியது, இதனால் நில உரிமையாளர்கள் பணம் கொடுப்பவர்களைச் சார்ந்து இல்லாமல் கடன்களைப் பெறலாம். இது நகர்ப்புற சொத்து உரிமையாளர்களுக்கு உதவியது, ஆனால், மாநில அடமான வங்கி கிராமப்புற கடன்களுக்கு செல்லவில்லை. கொலனியின் நிதிகளை ஒழுங்குபடுத்துவதற்காக 1939 இல் ஒரு மத்திய வங்கி நிறுவப்பட்டது. ஆனால் அது ஐரோப்பிய வணிக நலன்களால் கட்டுப்படுத்தப்பட்டது. அசையாச் சொத்தின் மீதான முதலீட்டு அல்லது கடன் பணத்திற்கு நிதியளிக்க முடியவில்லை. மேலும் இந்தியாவுடன் தவிர அந்நியச் செலாவணி பரிவர்த்தனைகளை செய்ய ஆரம்பத்தில் அனுமதிக்கப்படவில்லை.

வணிக சமூகத்தில் மலபாரைச் சேர்ந்த முஸ்லிம்கள், தமிழர்கள் தென்னிந்தியாவிலிருந்து நாட்டுக்கோட்டை செட்டியார்கள் மற்றும் மேற்கு இந்தியாவிலிருந்து ஆப்கானியர்கள், சிந்திகள், போராக்கள், மேமன்கள் ஆகியோர் அடங்குவர். இவர்கள் கடை வைத்தல், அடகு வியாபாரம், வியாபாரம், சிறுகடன் கொடுப்பதில் ஆதிக்கம் செலுத்தினர்.

சிறிய வர்த்தக வர்க்கம் பெரிய நிதியாளர்களுடனும் வங்கியாளர்களுடனும் தொடர்பைக் கொண்டிருக்கவில்லை. ஆனால், சிங்கள அரசியல்வாதிகள் அவர்களை பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் பக்கம் நிற்கும் வெளிநாட்டினராக ஒன்றிணைத்தனர். அதேவேளை சட்டரீதியாக அவர்களை ஓரங்கட்டும் செயல்களிலும் இறங்கினர். இவ்வாறு இனவாதம் சட்டசபையின் வழி நிறுவனமயமாதலுக்கு உள்ளாகத் தொடங்கியது.



## வாழ்வியல் தரிசனம்

உரிமை என்பது தமக்கானது மட்டும் எனும் எண்ணம் ஆள்பவர்களுக்கு உருவாகிவிட்டது. அத்துடன் சுதந்திரமும் தங்களுக்கான சொத்து என வெளிப்படையாகக் காட்டுகின்றனர். நடத்தையில் நீதி, நியாயம் அறவே இல்லை.

தங்கள் செயல்களில் இறுமாப்பு அடைகின்றவர்கள், எதிர்காலத்தின் தாக்கங்களை உணர்வதே இல்லை. உலக மாற்றங்கள் இயல்பானவை. சர்வாதிகாரம் என்பது வெறும் புஷ்வாணம் ஆகும் என்பதை உணர்கின்றார்கள் இல்லை. மக்கள் பலம் பற்றி அறியாமல் இருப்பது வீழ்ச்சியைத் தரும்.

இத்தகையவர்கள் தங்களைத் தாங்களே இழக்கின்றார்கள். கற்பனையில் பல அரசாங்கங்கள் இயங்குகின்றன. மக்கள் குரல்கள் இவர்களுக்குக் கேட்கவில்லை என நடிக்கிறார்கள்.

எதுவும் நிரந்தரம் இல்லை. பொய்மை கருகிவிடும். கர்மா எவரையும் விட்டுவிடாது. செய்த தவறுகளுக்கு, கர்மா தண்டனை வழங்கும்.

இயற்கை நியதிகூட, ‘கர்மா’ என்பதில் ஐயம் இல்லை. ஆண்டவன், துட்டர்களை மன்னிப்பதும் இல்லை; மறப்பதும் இல்லை.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

பூநகரி பிரதேச செயலாளர் பிரிவு:

### குடிநீர் இன்றி அவதி

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பொன்னாவெளி, வலைப்பாடு, வேரவில், கிராஞ்சி, பாலாவி போன்ற கிராமங்களில் சுத்தமான குடிநீர் இன்றி, பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த பிரதேசத்தில், கடந்த 40 வருடங்களாக இந்தக் குடிநீர் பிரச்சினை காணப்படுவதாகவும் அதற்கு முன்னர் குறித்த இடங்களில் காணப்பட்ட நன்னீர் கிணறுகளில், கடல்நீர் ஊறி உவர்நீராக மாறியுள்ளன. இதனால் மேற்படி ஐந்து கிராமங்களிலும், குடிநீர் அற்றநிலை காணப்படுகிறது.

குறித்த பகுதிகளுக்கு தேசிய நீர் வழங்கள் வடிகாலமைப்பு சபையால் நீர் விநியோகம் மேற்கொள்ளப்படுகின்ற போதும், அவை சீராக மேற்கொள்ளப்படுவதில்லை. அத்துடன், போதுமான அளவும் நீர் கிடைப்பதில்லை என்றும் குறித்த பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு குடிநீரின்றி பெரும் சிரமங்களை எதிர் கொள்வதாக தெரிவித்துள்ள பிரதேச மக்கள், தற்போதைய வரட்சி நிலை காரணமாக, கால்நடைகள் நீரின்றி அலையும் அவலநிலையும் காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டி உள்ளனர்.

யது பாஸ்கரன்

SLT குழுமத்தின் 2023 இன்

# இரண்டாம் காலாண்டு நிதி பெறுபேறுகள்



நடப்பு ஆண்டின் இரண்டாம் காலாண்டில் SLT PLC இனால் 2.4% (ரூ. 400 மில்.) வருமான வளர்ச்சி பதிவாகியிருந்த நிலையில், மொபிடெல் 9.3% (ரூ. 1,066 மில்.) சரிவை பதிவு செய்திருந்தது. எனவே, குழுமத்தின் வருமானம் 2.8% (ரூ. 763 மில்.) இனால் வீழ்ச்சியடைந்திருந்தது. SLT PLC வருமான அதிகரிப்பில் புரோட்பான்ட், IPTV மற்றும் நிறுவனசார் வருமான மூலங்கள் பங்களிப்பு செய்திருந்தன. எவ்வாறாயினும், சர்வதேச இடம்மாற்று வருமானம் 90.3% (ரூ. 614 மில்.) குறைவடைந்தமை காரணமாக இந்த அதிகரிப்பும் குறைந்திருந்தது. சர்வதேச இடம்மாற்று வருமானம் என்பது எவ்விதமான எல்லைப் பெறுமதிகளையும் கொண்டிருக்காது என்பதை குறிப்பிட வேண்டும். SLT PLC வருமான வளர்ச்சி பிரதானமாக, ஃபைபர் வலையமைப்பு மற்றும் வாடிக்கையாளர் வெளியேற்றம் போன்றவற்றால் தாமதமடைந்தது. மொபிடெல் வருமான வீழ்ச்சியில், வாடிக்கையாளர் இருப்பில் ஏற்பட்ட வீழ்ச்சி பங்களிப்புச் செய்திருந்தது. ஜூன் 2022 முதல் 2023 ஜூன் வரையான காலப்பகுதியில் வாடிக்கையாளர் இருப்பு 1 மில்லியனால் வீழ்ச்சியடைந்திருந்தது.

SLT குழுமத்தின் தொழிற்பாட்டு செலவுகள், முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், 2023 இரண்டாம் காலாண்டு காலப்பகுதியில் 15.1% இனால் (ரூ. 2,513 மில்.) அதிகரித்திருந்தது. மொபிடெல் வருமானம் ஒப்பீட்டளவில் வீழ்ச்சியடைந்தாலும், தொழிற்பாட்டு செலவுகள் 30.4% இனால் (ரூ. 1,998 மில்.) அதிகரித்திருந்தது. விற்பனைகளுடன் தொடர்புடைய தரகுகளால் இரண்டாம் காலாண்டில் அதிகளவு பங்களிப்பு வழங்கப்பட்டிருந்தன. SLT PLC தொழிற்பாட்டு செலவுகள் 5.5% இனால் (ரூ. 619 மில்.) அதிகரித்திருந்தது. இலங்கை ரூபாயின் மதிப்பிறக்கம், மின்சாரக் கட்டண அதிகரிப்பு மற்றும் எரிபொருள் விலைகள் அதிகரிப்பால் ஏற்பட்ட AMC/license செலவுகள் இதில் பங்களிப்பு செய்திருந்தன.

குழுமத்தின் EBITDA பெறுமதி 31.9% இனால் (ரூ. 3,276 மில்லியன்) வீழ்ச்சியடைந்திருந்தது. மொபிடெல் EBITDA பெறுமதி 61.9% இனால் (ரூ. 3,064 மில்லியன்) வீழ்ச்சியடைந்திருந்தமை முக்கிய பங்காற்றியிருந்தது. அதன் பிரகாரம், குழுமத்தின் தொழிற்பாட்டு வருமானம், வரிக்கு முந்திய மற்றும் பிந்திய இலாபம் முறையே 92.7% (ரூ. 3,121 மில்.), 161.3% (ரூ. 6,039 மில்.) மற்றும் 208.0% (ரூ. 4,076 மில்.) ஆகிய பெறுமதிகளால் வீழ்ச்சியடைந்திருந்தன. குறைந்த வருமானம் மற்றும் உயர் தொழிற்பாட்டு செலவுகள் போன்றவற்றால் மொபிடெல் ரூ. 835 மில்லியன் தொழிற்பாட்டு இழப்பாக பதிவு செய்திருந்தது. காலாண்டில் தேறிய இழப்பு ரூ. 1,390 மில்லியனாக பதிவாகியிருந்தது. காலாண்டில் SLT PLC இன் தேறிய இழப்பு ரூ. 1,027 மில்லியனாகும். செலவு அதிகரிப்பு மற்றும் LTE சொத்துகள் நடைமுறைப்படுத்தப்பட்டமை போன்றவற்றால் இந்த இழப்பு பதிவாகியிருந்தது. தொழிற்பாட்டு செலவுகளில் SLT PLC ஊழியர் செலவுகள் 36.8% ஆக பதிவாகியிருந்தன.

SLT குழுமத்தின் வருமான வளர்ச்சி 2023 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டு காலப்பகுதியில் ரூ. 52.7 மில்லியனாக வீழ்ச்சியடைந்திருந்தது. கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 0.4% வீழ்ச்சியாகும். நிறுவனமட்டத்தில், SLT வருமானங்கள் 2023ஆம் ஆண்டின் முதல் அரையாண்டு காலப்பகுதியில் ரூ. 34.6 பில்லியனாக பதிவாகியிருந்தது. இது 6.4% வளர்ச்சி என்பது குறிப்பிடத்தக்கது.

மொபிடெல் வருமானம், 2022 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டு காலப்பகுதியில் ரூ.1.5 பில்லியன் இழப்பை பதிவு செய்திருந்த நிலையில், 2023 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டு காலப்பகுதியில், ரூ. 2.2 பில்லியனால் வீழ்ச்சியடைந்திருந்தது. எவ்வாறாயினும், நிர்வாகத்தில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களினூடாக, மொபிடெலினால் அதன் வாடிக்கையாளர்கள் இருப்பு மற்றும் வருமானத்தில் ஏற்பட்ட இழப்பை சீர் செய்து கொள்ள முடிந்துள்ளது.

2023இன் முதல் அரை ஆண்டில்

# கொமர்ஷல் வங்கி மீண்டெழுந்தது





கொமர்ஷல் வங்கி 2023இன் முதல் அரை ஆண்டில் வட்டி வருமானத்தில் 150.812 பில்லியன் ரூபாய் உட்பட மொத்த வருமானமாக 167.668 பில்லியன் ரூபாயை பதிவு செய்துள்ளது. இவை ஆரோக்கியமான உயர்மட்ட வளர்ச்சியாக முறையே 40.29 வீதம் மற்றும் 71.15 வீதம் என பதிவாகி உள்ளன. வங்கித்துறையில் குறிப்பிடத்தக்க தளம்பல்கள் நிலவிய காலப் பகுதியில் இந்த வளர்ச்சி வீதங்கள் பதிவாகியமை குறிப்பிடத்தக்கதாகும்.

கொமர்ஷல் வங்கி குழுமம் கட்டணங்கள் மற்றும் தரகு வருமானங்களையும் சேர்த்து 22.27 வீதம் அதிகரித்து ரூ. 14.337 பில்லியனாக பதிவாகியது. தேறிய கட்டணங்கள் மற்றும் தரகு வருமானம் 19.30 வீதத்தால் அதிகரித்து ரூ. 10.591 பில்லியனாகவும் தேறிய ஏனைய செயற்படு வருமானம் 236.42 வீதமாக அதிகரித்து ரூ. 17.086 பில்லியனாகவும் பதிவாகியது. இது 2022இன் முதல் அரையாண்டு பகுதியில் ரூ. 12.524 பில்லியன் நட்டமாக இருந்தது.


எவ்வாறேனும் கடந்த ஆறு மாதங்களில் வட்டி செலவினங்கள் ரூ. 65.958 பில்லியன் அல்லது 139.14 வீதமாக அதிகரித்து ரூ. 113.362 பில்லியனாக பதிவாகியது. குழுமத்தின் தேறிய வட்டி வருமானம் 8.01 வீதத்தால் குறைவடைந்து ரூ. 37.450 பில்லியனாக இருந்தது.

குழுமத்தின் மொத்த செயற்பாட்டு வருமானம் 27.03 வீதத்தால் குறைவடைந்து ரூ. 50.520 பில்லியனாக உள்ளது. ஆனால், தேறிய செயற்பாட்டு வருமானம் மீளாய்வுக்கு உட்பட்ட குறிப்பிட்ட காலப்பகுதியில் 9.69 வீதத்தால் அதிகரித்து ரூ. 37.309 பில்லியனாக உள்ளது. ஆறு மாத காலத்துக்கான குறைபாட்டு ஒதுக்கீடு மற்றும் நட்டங்களுக்காக ரூ. 13.211 பில்லியன்கள் குழுமத்தால் ஒதுக்கப்பட்ட பின்னராகும். 2022 க்கான குறைபாட்டு கட்டணம் இலங்கை நாணயத்தின் மதிப்பிறக்கம் காரணமாக வெளிநாட்டு நாணய மதிப்பீடு அரச பிணைகளுக்கான கணிசமான மேலதிக ஒதுக்கீட்டை உள்ளடக்கியதாகும். மொத்த செயற்பாட்டு செலவினம் 18.04 வீதத்தால் அதிகரித்து ரூ. 21.285 பில்லியனாக இருந்தது.

குழுமத்தின் மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் கடந்த ஆறு மாத காலங்களில் 4.71 வீதமாகக் குறைவடைந்து ரூ. 1.188 ட்ரில்லியனாக உள்ளது. இலங்கை ரூபாயின் பெறுமதி அங்கிகாரத்தை தொடர்ந்து வெளிநாட்டு நாணயங்களின் அடிப்படையிலான கடன்கள் மற்றும் முற்பணங்களின் மீள் மதிப்பீட்டுத் தாக்கம் இதற்கு ஒரு வகையில் காரணமாகும். குழுமத்தின் மொத்த வைப்பு 30 ஜூன் 2023இல் ரூ. 1.959 ட்ரில்லியனாகும். ரூபாயின் அடிப்படையிலான வைப்புகளின் அதிகரிப்பு 2022 முடிவு முதல் ரூ. 48.47 பில்லியனாக அதிகரித்துள்ளது. ஆனால், வெளிநாட்டு நாணயத்தின் அடிப்படையிலான வைப்புகளின் பெறுமதி ரூபாயின் அங்கிகாரம் காரணமாக கணிசமாகக் குறைந்துள்ளது.

## கல்லூரி வாசனையாய் ...





கல்லூரி எனும்
பூங்காவனத்தில்
மணம் கமழும்
வாசனைகள் நாம்
பள்ளிசோலையில்
பட்டாம்பூச்சியாய்
பறந்து அறிவு
வாசனை நுகர்ந்திட !

தோழமை பூக்களாய்
தோல்விகளில் பூங்கொத்தாய்
நட்பின் வாசனையாய்
நறுமணம் வீசும் கல்லூரி !

காதல் ஜோடிகளாய்
காகிதம் அது இணைத்ததே
சிறு மொட்டுகளும் பூவானது
கொள்ளை கொள்ளும் அழகில் காதல்
வாசனை வீசும் கல்லூரி!

காலம் கடத்தும் கடந்த காதல்
காத்திருப்பும் ஏமாற்றமும் மிஞ்சியது
கண்ணீர் விழி நீர் நிஜ காதல்
நேச வாசனை வீசும் கல்லூரி!

பரீட்சை வாசனை கல்லூரி
எங்கும் பரவி
பதற்ற வாசனை பரம்பிற்று
கற்றதை சறுக்கல் இன்றி
எழுதி பெறுபேற்று வாசனை!

சிந்தனை வேறு சாதனை
வேறு இதயங்கள்
வேறு இறுதியில் கல்லூரிக்கு
நாம் கொடுத்தது வெற்றி வாசனை!

மீண்டும் ஒன்றாய்
பிரிந்தோம்,காலம் கடந்து
சந்திபோம் பழைய மாணவராய்
வாசனை வீசும் பூங்காவனமாக!

ஆஷா அனிஸ்டன்
கொழும்பு

## மனிதம்



சைத்தான்கள் குடிகொண்டிருக்கும்
இருண்ட கிரகம் இது...!
ஆனாலும்
சில நல்ல மனங்களின்
வருகையினால் மனிதம் இன்னும்
ஒட்டிக்கொண்டிருக்கிறது...!

அந்த சைத்தான்களின்
கொடூர ஆட்சியினை
எதிர்த்து
சிலர் கல் எறிகின்றார்கள்
சிலர் கவிதை
எழுதுகின்றார்கள்...!

இன்னும் சிலரோ
அவர்களின் கொடூர ஆட்சியின் பிடியில்
சிக்கிக் கொண்டு சீரழிகின்றார்கள்...!

அஷ்வினி வையந்தி

## துரோகம்



ஒரு சொல்லைப் போன்றே
அணுகியிருந்தேன்
பக்கங்களை கடந்து
கொண்டேயிருந்தது.....
இறுதிப்பக்கத்தில்
அதன் மரண பயத்தை
கண்டிருந்தேன்
இந்த புத்தகத்தை
வாசிக்காதே கடந்திருக்கலாம்

லலித்தா-
திருகோணமலை



## தொலைந்தவர்கள்




காணாமல்
போனோரை
கணக்கெடுத்துக்
கொண்டு இருக்காதே
!!
உனக்காய்
காத்திருப்போருக்கு
நேரம் ஒதுக்க
கற்றுக்கொள்!!

காரணம்..,
காணாமல் போனோர்
யாரோ ஒருவருக்கு காத்திருக்கப்போய்
இருக்கலாம்...,!!
ஆதலால், நீஉனக்காய் காத்திருப்போருக்கு
உன் நேரத்தை செலவழிக்கத்
தொடங்கு...!!
உன் நேரம், உன் தேவைக்கும்;
உன் தேவையானவர்களுக்கும்;
மட்டும் பயன்படட்டும் !!

ஏனெனில்,
நேரத்தை காசுகொடுத்தேர் கடனுக்கேர்
வாங்க முடியாது...!!
இழந்துவிட்டால்... கடவுளே வந்தாலும்
மீட்டு தரமுடியாது..!!

க.கேஷானி தினுஷிக்கா
கொழும்பு



## பகலின் அந்தரங்கம்...



வானம் உடைந்து
மையிருள்-
பூசிக் கொள்ளும்

தடுப்பில்லா
வான்வெளியில்
இதழ் விரித்துப் பூக்கள்
பனித்துளியை
உள்வாங்கிக் கொள்ளும்

பகலின் அந்தரங்கம்
இரவில் திறக்கப்படும்
பகலில் உள்ளவை

படம் பிடிக்கப்பட்டு
இரவிடம் வந்துசேரும்

உன் தேகம்
உயிரிலே கலந்து
உறவாகிப் போகும்

சின்னவிரல்கள்-
உடல்பட்டு
நகக்குறிகள்
சித்திரம் பேசும்

க.யோகானந்தன்

அமெரிக்கா

# தாய்வானுக்கு ஆயுதங்களை விற்கும் அமெரிக்கா

சீனாவுக்கும் தாய்வானுக்கும் இடையில் மோதல் இருந்து வருகிறது. தாய்வான் தங்களின் ஒரு பகுதி எனக் கூறி வரும் சீனா, இராணுவம் மூலம் தாய்வானை அடிக்கடி அச்சுறுத்தி வருகிறது. அதேவேளையில் தாய்வான் அமெரிக்காவுடன் நட்புடன் பழகி வருகிறது. இந்நிலையில் தாய்வானுக்கு 500 மில்லியன் அமெரிக்க டொலருக்கு ஆயுதங்கள் விற்க, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அரசாங்கம் ஒப்புதல் அளித்துள்ளது.


இந்தத் தகவலை அமெரிக்க வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது. நவீன எஃப்-16 போர் விமானத்தின் உபகரணங்கள், உதிரிப்பாகங்கள், கணினி மென்பொருட்கள் உள்ளிட்டவை அதில் அடங்கும். சீனா அச்சுறுத்தி வரும் நிலையில், இந்த ஒப்பந்தம் முந்தையதை விட நவீன ஆயுதங்களை உள்ளடக்கியதாகும்.

தாய்வானின் பாதுகாப்பு திறனை அதிகரிக்கும் வகையிலும், அந்த நாட்டின் பொருளாதாரம், பாதுகாப்பு ஆகியவற்றை கருத்தில் கொண்டும் அமெரிக்கா இந்த ஆயுதங்களை விற்பனை செய்கிறது. சீனாவின் தற்போதைய மற்றும் எதிர்கால அச்சுறுத்தலை, தாய்வான் எதிர்கொள்வதற்கு இது உதவியாக இருக்கும். சீனாவின் வான் தாக்குதல், பிராந்தியத்தை பாதுகாத்தல், எஃப்-16 புரோகிராம் தொடர்பாக அமெரிக்காவுடன் இயங்கும் தன்மை அதிகரித்தல் போன்றவற்றிற்கு உதவியாக இருக்கும் எனவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.



துருக்கி

# துருக்கியில் பரவும் காட்டுத்தீ



கிரீஸில் பரவி வரும் காட்டுத் தீ, அண்டை நாடான துருக்கியிலும் பரவி வருகிறது. இதனால் ஒன்பது கிராமங்களைச் சேர்ந்த 1,200க்கும் மேற்பட்ட மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். இந்தத் தீயில் 1,500 ஹெக்டேயர்களுக்கு மேல் எரிந்துள்ளது. மேலும், 48 பேர் புகை காரணமாக ஏற்பட்ட பாதிப்பால் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தக் காட்டுத் தீயை துருக்கிய தீயணைப்பு வீரர்கள் கட்டுப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். காட்டுத் தீ காரணமாக ஏஜியன் கடலில் இருந்து மர்மாரா கடல் வரையிலான கடல் போக்குவரத்து நிறுத்தப்பட்டுள்ளது. மேலும், கிரீஸில் தீயணைப்பு வீரர்கள், 18 பேரின் எரிந்த உடலங்களைக் கண்டுபிடித்துள்ளனர்.

அமெரிக்கா

# 'இஸ்ரோ'வுக்கு 'நாசா' வாழ்த்து

சந்திரயான்-3 திட்ட வெற்றி குறித்து அமெரிக்க விண்வெளி ஆய்வு அமைப்பான 'நாசா' பாராட்டு தெரிவித்துள்ளது. 'நாசா' தலைவர் பில் நெல்சன், தனது சமூக வலைத்தள பதிவில் குறிப்பிட்டிருப்பதாவது: 'சந்திரயான்-3, நிலவின் தென்துருவத்தில் வெற்றிகரமாக தரையிறங்கியதற்காக இஸ்ரோவுக்கு வாழ்த்துகள். நிலவில் விண்கலத்தை மெதுவாக தரையிறக்கிய 4-வது நாடு என்ற பெருமையை பெற்ற இந்தியாவுக்கும் வாழ்த்துகள். இத்திட்டத்தில் உங்களின் கூட்டாளியாக இருப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம்'.

தெலுங்கானா

# ஆண்-பெண் உறுப்புகளுடன் அரிய மனிதர்

தெலுங்கானா மாநிலம் ஹைதராபாத், மஞ்சேரியலை சேர்ந்தவர் 40 வயது ஆண். இவருக்கு அடிக்கடி வயிற்று வலி இருந்து வந்தது. இதனால் செகந்திராபாத்தில் உள்ள கிம்ஸ் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சென்றார். அவரை பரிசோதித்த போது அவருக்கு ஆண், பெண் இனப்பெருக்க உறுப்பு இருந்தது தெரியவந்தது. அரிதான இதுபோன்ற நபர்களுக்கு கருப்பை இருக்கும் சிலருக்கு கருவில் ஆண், பெண் இனப்பெருக்க உறுப்புகள் இருக்கும். சில ஹார்மோன்கள் தாக்கத்தால் ஒன்று மட்டுமே எஞ்சி இருக்கும். அப்போது அவர் பிறப்பிலேயே ஆணா பெண்ணா என்பது முடிவு செய்ய முடியும்.

மரபணுக்களின் பிறழ்வு காரணமாக ஹார்மோன்கள் போதுமான அளவு வெளிப்படுவதில்லை. இது போன்ற அரிய வகை



மனிதர்கள் உலகம் முழுவதிலும் 300 பேரும், இந்தியாவில் 20 பேரும் உள்ளனர். அத்தகைய மனிதர்கள் சாதாரணமாக தெரிவார்கள். தாடி மீசை இருக்கும். ஆண்குறி சாதாரணமாக இருக்கும். விந்து உற்பத்தி இருக்காது என டொக்டர்கள் தெரிவித்தனர். பரிசோதனைக்கு வந்த நபருக்கு டொக்டர்கள் லிப்ரோஸ் அறுவை சிகிச்சை மூலம் அவரது ஆண் உறுப்பை அகற்றி சிகிச்சை அளித்தனர். தற்போது அந்த நபர் நலத்துடன் இருக்கிறார்.



விருதுநகர்

# 34 படிகளை 4 நிமிடத்தில் ஏறிய 11 மாத சிசு

விருதுநகர் சுலோச்சனா தெருவைச் சேர்ந்த ஒரு தம்பதிக்கு இரட்டை குழந்தைகள் உள்ளனர்.

அவர்கள் 11 மாதங்களே ஆன கைலன் பார்த்தசாரதி, அதியன் பார்த்தசாரதி. இதில் அதியன் பார்த்தசாரதி எப்போதும் துருதுரு குழந்தையாக வளர்ந்து வந்துள்ளான். இதனால் அதியன் பார்த்தசாரதி மீது அதிக கவனம் செலுத்தி வந்தனர். முதல் மாடியில் வசித்து வரும் இவர்கள் குழந்தைகளின் பாதுகாப்பு கருதி வீட்டை எப்போதும் பூட்டியே வைத்துள்ளனர்.

இரட்டை குழந்தைகளுக்கு 10 மாதங்கள் ஆன நிலையில் அதியன் பார்த்தசாரதி தடுப்புகளை கீழே தள்ளிவிட்டு, வேகமாக தவழ்ந்து சென்று தடுமாறி விழுவதும் வாடிக்கையாக இருந்தது.

கடந்த சில வாரங்களுக்கு முன்பு அந்த குழந்தை வீட்டின் 2-வது மாடிக்கு ஏற முயன்றுள்ளான். முதலில் தடுத்த பெற்றோர் அவனது தைரியத்திற்கு ஊக்கம் கொடுத்தனர். அதன் பயனாக 34 படிகளை 10 மாத குழந்தை அசாதாரணமாக 4 நிமிடங்களில் ஏறியது. இதனை வீடியோவாக பதிவு செய்த குழந்தையின் பெற்றோர் சமூக வலைதளங்களில் பதிவிட்டனர்.

பந்துவீச்சாளர்களின் தரவரிசையில்

# மூன்றாமிடத்துக்கு முன்னேறிய முஜீப் உர் ரஹ்மான்



சர்வதேச கிரிக்கெட் சபையின் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளுக்கான பந்துவீச்சாளர்களின் தரவரிசையில் மூன்றாமிடத்துக்கு ஆப்கானிஸ்தானின் சுழற்பந்துவீச்சாளர் முஜீப் உர் ரஹ்மான் முன்னேறினார்.

பாகிஸ்தானுக்கெதிரான முதலாவது போட்டியில் 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றியதைத் தொடர்ந்தே ஆறாவது இடத்திலிருந்து மூன்று இடங்கள் முன்னேறி மூன்றாமிடத்தை முஜீப் உர் ரஹ்மான் அடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,

ஜொஷ் ஹேசில்வூட், 2. மிற்செல் ஸ்டார்க், 3. முஜீப் உர் ரஹ்மான், 4. ரஷீட் கான், 5. மொஹமட் சிராஜ், 6. மற் ஹென்றி, 7. ட்ரெண்ட் போல்ட், 8. அடம் ஸாம்பா, 9. ஷகீன் ஷா அஃப்ரிடி, 10. குல்தீப் யாதவ்.

இதேவேளை மேற்குறித்த போட்டியில் 61 ஓட்டங்களைப் பெற்ற இமாம்-உல்-ஹக் துடுப்பாட்டவீரர்களின் தரவரிசையில் நான்காமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி மூன்றாமிடத்தை அடைந்துள்ளார்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

பாபர் அஸாம், 2. றஸி வான் டர் டுஸன், 3. இமாம்-உல்-ஹக், 4. ஷுப்மன் கில், 5. பக்கர் ஸமன், 6. ஹரி டெக்டர், டேவிட் வோர்னர், 8. குயின்டன் டி கொக், 9. விராட் கோலி, 10. ஸ்டீவ் ஸ்மித்.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

ஷகிப் அல் ஹஸன், 2. மொஹமட் நபி, 3. சிகண்டர் ராசா, 4. ரஷீட் கான், 5. அஸாட் வலா



# சிற்றியில் நீடிக்கும் பேர்ணார்டோ சில்வா

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் சிற்றியின் மத்தியகளவீரரான பேர்ணார்டோ சில்வா, அக்கழகத்தில் ஒப்பந்த நீடிப்பொன்றில் கைச்சாத்திட்டதாக அக்கழகம் அறிவித்துள்ளது.

ஓராண்டு நீடிப்பில் 29 வயதான சில்வா கைச்சாத்திட்ட நிலையில், 2026ஆம் ஆண்டு வரையில் சிற்றியில் அவர் தொடரவுள்ளார்.

வட மாகாண பெண்களுக்கான 17 வயதுக்குட்பட்டோருக்கான கால்பந்தாட்டம்:

# சம்பியனாகியது தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி

■ அஸ்ஹர் இப்றாஹீம்

வட மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான பெண்களுக்கான 17 வயதுக்குட்பட்டோருக்கான கால்பந்தாட்டத் தொடரில் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி சம்பியனாகியது.

அண்மையில் நடைபெற்ற தமது இறுதிப் போட்டியில் அளவெட்டி அருணோதயக் கல்லூரியை 3-2 என்ற ரீதியில் பெனால்டியில் வென்றே தொடர்ச்சியாக இரண்டாவது முறையாக மாகாண மட்டத்தில் மகாஜனா சம்பியனாகியது.




சதுரங்க உலகக் கிண்ண இறுதிப் போட்டி

# இரண்டாம் இடத்தை பெற்றார் இந்திய பிரக்ஞானந்தா

உலகக் கோப்பை செஸ் இறுதிப் போட்டியின் டை பிரேக்கரில் வெற்றி பெற்றதன் மூலம் சாம்பியன் பட்டம் வென்றார் மேக்னஸ் கார்ல்சன். தமிழகத்தைச் சேர்ந்த இந்தியாவின் இளம் வீரர் பிரக்ஞானந்தா போராடி தோல்வியுற்று இரண்டாம் இடம் பிடித்தார்.

உலகக் கோப்பை செஸ் தொடர் அஜர்பைஜானில் உள்ள பாகு நகரில் நடைபெற்றது. இதன் இறுதிப் போட்டியில் முதல்



நிலை வீரரான நோர்வேயின் மேக்னஸ் கார்ல்சனுடன், 18 வயதான இந்திய கிராண்ட் மாஸ்டரும், சென்னையை சேர்ந்தவருமான பிரக்ஞானந்தா விளையாடினார்.

அந்நூரின்ஸ் தொடர்:

# வெற்றிவாகை சூடிய 2013 அணி

■ எச்.எம்.எம். பர்ஸான், எம்.எம். அஹமட் அனாம்

வாழைச்சேனை அந்நூர் தேசிய பாடசாலை பழைய மாணவர் அமைப்பினர் நடாத்திய அந்நூரின்ஸ் கிரிக்கெட் தொடரை 2013 க.பொ.த. பழைய மாணவர் அணி கைப்பற்றியுள்ளது.

28 அணிகள் பங்குபற்றிய குறித்த தொடரின் இறுதிப் போட்டியானது அந்நூர் தேசிய பாடசாலை மைதானத்தில் அண்மையில் நடைபெற்றபோது 2017ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தர அணியை வென்றே தொடரை 2013 அணி கைப்பற்றியது.

ஆறு ஓவர்கள் கொண்ட இத்தொடரின் இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய 2013 அணி, 6 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 62 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு 63 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய 2017 அணி 6 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 53 ஓட்டங்களையே பெற்று ஒன்பது ஓட்டங்களால் தோல்வியடைந்தது.




இத்தொடரின் நாயகனாகவும், சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் 2013ஆம் ஆண்டு அணியின் வீரர் கே.எம். இல்ஹாமமும், சிறந்த பந்து வீச்சாளராக 2007ஆம் ஆண்டு அணியின் வீரர் எம்.சி. றிபாஸும், இளம் வீரராக 2015ஆம் ஆண்டு அணியின் வீரர் எம்.ஏ.சி.எம். பாஸில் தெரிவாகினர். லெஜன்டாக 1995ஆம் ஆண்டு அணியின் வீரரான ஏ.எல்.எம். நௌபர் தெரிவாகியதோடு, சிறந்த பிடி எடுப்புக்கான விருது 1994ஆம் ஆண்டு அணியை சேர்ந்த வீரர் எம்.ரீ.வை. அறபாத்துக்கு கிடைத்திருந்தது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 25 ஓகஸ்ட் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.